එච්. එම්. විජිත හේරත්, පා. ම.
எச். எம். விஜித ஹேரத், பா. உ.
H. M. Vijitha Herath, M. P.
විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍ය
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்
Minister of Foreign Affairs, Foreign Employment and Tourism

# வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரின் வெசாக் தின வாழ்த்துச் செய்தி

இந்த புனிதமான வெசாக் நன்னாளில், இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள பௌத்த சமூகத்தினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெசாக் தினமானது, புத்தரின் பிறப்பு, ஞானோதயம் மற்றும் மறைவு ஆகிய மூன்று உன்னத ஞானத்தின் அடையாளங்களை நினைவுகூர்கிறது. இவை மனித மனதின் உண்மையான ஆற்றலை வெளிப்படுத்தி, கருணையுடனும், அர்த்தத்துடனும் வாழ்வதற்கான தெளிவான பாதையை வழங்கின. போர், மோதல் மற்றும் ஆழமாகிவரும் பிளவுகளால் சிதைந்துள்ள இவ்வுலகில், அமைதி (சாந்தி) குறித்த புத்தரின் போதனைகள் இன்றைய உலகிற்கும் மிகவும் பொருத்தமானவையாக இருக்கின்றன.

புத்தபகவான் அறிவித்தபடி, “அக்கொதென ஜினே கொதங், அசாதுங் சாதுனா ஜினே” - கோபத்தை அஹிம்சையால் வெல், தீமையை நன்மையால் வெல். நாம் பிரிவினையின் மாயைகளிலிருந்து விடுபட்டு, எல்லையற்ற நல்லெண்ணத்தாலும் அனைத்து உயிர்கள் மீதான உண்மையான கருணையாலும் வழிநடத்தப்பட்டு, நல்லிணக்கமுள்ள தேசங்களாக வாழ வேண்டும். நமது அரசாங்கம், தர்மத்தை தேசியப் புதுப்பித்தலின் மையமாக வைத்து, “இலங்கையைப் புனரமைப்போம்” எனும் திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறது: பொருளாதார மீட்சியை அறநெறிசார் முகாமைத்துவம், நல்லாட்சி, மற்றும் சமூக நலனுடன் இணைத்து, நீதியானதும், நிலைபேறானதுமான சமுதாயத்திற்காக உன்னத எண்வழிப் பாதையில் பயணிக்கிறது.

இந்த வெசாக், தனியொருநாள் பக்திக்கு அப்பாற்பட்ட உத்வேகத்தை அளிக்கட்டுமாக. மெத்தா (கருணை), கருணா (இரக்கம்), முதிதா (பரிவுணர்வுடன் கூடிய மகிழ்ச்சி), மற்றும் உபேக்கா (சமநிலை) ஆகிய நான்கு பிரம்மவிஹாரங்களும், நாடுகளை உண்மையான சர்வதேச அமைதி, ஒத்துழைப்பு, மற்றும் பரஸ்பரப் புரிதலை நோக்கி வழிநடத்தட்டும். தர்மத்தை சடங்குகளுக்குள் மட்டும் சுருக்கிக் கொள்ளாமல், நாம் ஆட்சி செய்யும் விதத்திலும், முரண்பாடுகளைத் தீர்க்கும் விதத்திலும், ஒருவரையொருவர் நடத்தும் விதத்திலும் அதனை அன்றாடம் கடைப்பிடிப்போம். புத்தர் போதித்தது போல, “அத்தா ஹி அத்தனோ நாத்தோ” - ஒருவன் தனக்குத் தானே புகலிடமாவான். அந்த உன்னதப் பாதையில் நடப்பதற்கான வலிமையை நாம் அனைவரும் இன்றும் என்றும் பெறுவோமாக.

**விஜித ஹேரத்**
**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்**
**2026, மே 30**

කාර්යාලය/அலுவலகம்/Office: +94-11-2430221, +94-11-2445498 ෆැක්ස්/பெக்ஸ்/Fax No. : +94-11-2430222
වෙබ් අඩවිය/வலைத்தளம்/Website: www.mfa.gov.lk - ඊමේල්/மின்னஞ்சல்/Email: fmo@mfa.gov.lk
විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය, ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, குடியரசுக் கட்டிடம், கொழும்பு 01, இலங்கை.
Ministry of Foreign Affairs, Foreign Employment and Tourism, Republic Building, Colombo 01. Sri Lanka.